**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**வழக்கு எண் :OS No:27/2019 callwith OS: 39/2021 தேதி: 10.06.2024**

**வா.சா. 1 – லீலாவதி**

**குறுக்கு விசாரணை :** ( 1, 4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில்)

ருக்குமணியம்மாள் எனக்கு என்ன உறவு வேண்டும் என்றால் எனக்கு என் தந்தையுடன் பிறந்த சகோதரி ஆவார். ருக்குமணியம்மாளுக்கு ஆண் பெண் வாரிசு இல்லை. நான் இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது என் தந்தை தான் ருக்குமணியம்மாளின் வாரிசு என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ருக்குமணியம்மாள் 29.01.1997 வருடம் என் தந்தைக்கு ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த உயில் ஆவணத்தில் என் கணவர் வழியில் பாத்தியப்பட்ட காரை வீட்டை எழுதிவைப்பதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். அந்த உயில் ஆவணத்தில் தாவா சொத்தை ருக்குமணியம்மாள் என் தந்தைக்கு எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து ருக்குமணியம்மாளுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்பதால் தான் என் தந்தைக்கு உயிலில் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. ருக்குமணியம்மாள் சொத்து என்று வில்லங்கசான்றில் உள்ளது. ருக்குமணியம்மாளுக்கு தான் இந்த தாவா சொத்து பாத்தியப்பட்டது என்பதற்கு பத்திரமோ பட்டாவோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி UDR சர்வே சமயம் ஏமாற்றி பட்டா பெற்றதாக சொல்லுவதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. 2 ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்ட பட்டாவை ரத்து செய்ய வருவாய் துறையில் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. UDR சர்வே என்பது பற்றி எனக்கு விவரம் தெரியாது. UDR சர்வேயின்போது வருவாய்துறை அதிகாரிகள் முறையாக விசாரித்து 2 ம் பிரதிவாதி ராமசாமி பெயரில் முறையாக பட்டா வழங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. என் அத்தை ருக்குமணியம்மாள் UDR சர்வே செய்வதற்கு முன்பு அவர்களுக்கு எந்தவித பத்திரமும் இல்லாமல் 7 1/2 செண்டு இடத்தை எல்லம்மாள் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ருக்குமணியம்மாள் 25.04.1970 ஆண்டில் அடமானம் பத்திரம்

எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். UDR சர்வேக்கு முன்பாக என் அத்தை ருக்குமணியம்மாள் தனக்கு 15 செண்டு பாத்தியம் என்று தன்னிச்சையாக தான் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. ருக்குமணியம்மாளுக்கு தான் 15 செண்டு பாத்தியம். வருவாய்துறை விசாரணையில் ருக்குமணியம்மாளுக்கு 71/2 செண்டு மட்டும் தான் பாத்தியப்பட்டது என்று தீர்மானித்துள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக வருவாய் துறை அதிகாரிகள் விசாரித்து 03.02.2009 தேதியன்று 2ம் பிரதிவாதிக்கு நிலவுடைமை பட்டா எண்.17 கொடுத்துள்ளார்கள் என்றால் ருக்குமணியம்மாள் சொத்தை போலி பட்டா போட்டுள்ளார்கள். நான் வழக்கிற்காக போலியாக பட்டா போட்டுள்ளார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு நான் ஏதாவது சொத்து வரி செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். அந்த வழக்கில் இன்னும் தீர்ப்பாகவில்லை என்ற விவரம் எனக்கு தெரியும். பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது 08.01.2019 தேதியன்று காவல்துறையில் நான் ஒரு புகார் கொடுத்துள்ளேன் என்றும் அது உண்மை இல்லை என்பதால் அந்த புகாருக்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. ருக்குமணியம்மாள் 30.08.2011 தேதியன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தந்தை 29.06.2016 அன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தந்தை சுப்பையன் இறப்பதற்கு முன்பு 14.03.2012 தேதியன்று 2ம் பிரதிவாதி அவர் மகள் பெயருக்கு தானசெட்டில்மெண்டு எழுதி கொடுத்துள்ளார் என்றால் எல்லம்மாளுக்கு எழுதி கொடுத்த சொத்தைதான் எழுதி வைத்துள்ளார். தானசெட்டில்மெண்டு பத்திரத்தில் உள்ள சொத்து தாவா வழக்கில் உள்ள சொத்தை தான் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. என் அப்பா சுப்பையன் உயிருடன் இருக்கும்போதே 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்டு எழுதி கொடுத்தது சம்மந்தமாகவும் 2ம் பிரதிவாதி பெயரில் பட்டா சம்மந்தமாவும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பாவிற்கு தாவா சொத்து தனக்கு பாத்தியப்பட்டது இல்லை என்பது தெரிந்து தான் அவர் எந்த ஒரு வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

02.06.2016 தேதியன்று இந்த பிரதிவாதி எங்களுக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பை நான் வாங்கி கொண்டு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அனுபவம் இந்த பிரதிவாதிகளிடம் இருப்பதால் தான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை நான் அடியாள்கள் மூலம் சட்டத்திற்கு புறம்பாக இடையூறு செய்யததால் பிரதிவாதிகள் தனியாக வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு ஆவணங்கள் மூலம் பாத்தியப்பட்ட சொத்தை நான் எந்தவித உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

3ம் பிரதிவாதி தரப்பில் எந்த பிரதிநிதித்துவம் இல்லாததால் குறுக்குவிசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.